ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,857 — 1969 ජූනි 6 වැනි සිකුරාදා — 1969.6.6

14,857 ம் இலக்கம்—1969 ம் ஆண்டு யூன் மாதம் 6 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (III)—வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் | 109 | அலங்காரச் சித்திரசட்ட விளம்பரங்கள் | — |
| வியாபார உரிமை அடையாள அறிவிப்பு | — | வடிவ அமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் | — |
| ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் | — | பலவினமானவை | — |



## வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம், கட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

### பரிசோதனைக்குரிய நேரம்

அரசாங்க விடுமுறை தவிர்ந்த ஒவ்வொரு கிழமை நாட்களிலும் 10 மணி தொடக்கம் 4 மணிவரையிலும், போயா தினத்திற்கு முந்திய நாட்களில் 10 மணி தொடக்கம் 1 மணிவரையிலும் அலுவலகம் பொதுசனங்களின் அலுவலுக்குத் திறந்திருக்கும்.

எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 3 மணிவரையிலும், போயா தினத்துக்கு முந்திய நாட்களில் மத்தியானம் 12 மணி வரையிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

### நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது, அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால், அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.

### கூட்டுச் சேர்க்கை

150 ம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப்படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினுல் காட்டப்படும்.

### " அ " அல்லது " ஆ " பகுதியின் கீழ் விண்ணப்பம்

பதிவேட்டின் " அ " பகுதியின் கீழ் வரும் விண்ணப்பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக எண் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் " ஆ " பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் உத்தியோக எண்ணுக்கு முன் " ஆ " என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியினும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.


எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

## எதிர்ப்பு

**பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தகப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது படிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன் ரீ. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினுல், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம். பதிவு கோரும் விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து, எதிர்ப்பவரின் செலவு கோரும் மனு பரிசீலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.**

---

1. வியாபாரச்சின்னம் இல. 31,067. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் ஜனவரி மாதம் 22ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : அஹமது நிபாய் பின் ஆதமும் சுபெர் சாலி பின் ஆதமும் களனிவலி இன்டஸ்றீஸ் என்ற பெயரில் வியாபாரம் செய்பவர்கள், கொற்றபொட தோட்டம், அவிசாவலை; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின், அது :—. (5) வகுப்பு : 50. (6) வியாபாரச்சரக்கு : பொலிஸ்ரர் தெறிகள் (அதிக விலையுள்ள உலோகத்தினுலானவை தவிர்த்து). (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :





ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1969 ம் ௵ மார்ச் ௴ 13 ந் உ.

6—119

---

1. வியாபாரச்சின்னம் இல. 27,785. (2) பெற்ற திகதி : 1966ம் வருடம் எப்பரல் மாதம் 1 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : சிலோன் டுபாக்கோ கம்பனி, கொழும்பு 13, ஸ்கின்னேர்ஸ் வீதி வடக்கு, 108 ம் இலக்கத்தில் பதிந்த அலுவலகத்தைக் கொண்டு, இலங்கையில் இணைக்கப்பட்ட ஒரு கம்பனி; சிகரெட்டுகள், புகைக்கும் புகையிலை உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக் கேதும் விலாசம் இருப்பின், அது:—. (5) வகுப்பு : 45. (6) வியாபாரச்சரக்கு : உற்பத்தியாக்கப்பட்ட அல்லது உற்பத்தியாக்கப்படாத புகையிலை. (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :




(i) இவ்வியாபார, உரிமை அடையாளம் பதியப்படுவதால் "டபிள்யு" என்ற எழுத்தும் புகையிலையின் சித்திரமும் பாவிப்பதில் ஏகபோக உரிமை வழங்கப்படமாட்டாது.

(ii) இவ்வுரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இலக்கங்கள் 9309, 13045, 13881 ஆகியவற்றுடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஜே. எப். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1968 ம் ௵ ஜனவரி ௴ 12 ம் உ.

6—128

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத் துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் மற் றும் நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணிவரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக ரைப் அடித்** தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படுதல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக் றறுல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிர சுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| **அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)** | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 00 | 60 00 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. | 36 00 | 42 00 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 | 51 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

| **தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்** | விலை ரூ. ச. | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 00 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | 15 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** *சாதாரணமாக* வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1969**

| மாதம் | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|
| **சனவரி** .. | 3.1.69 | வெள்ளி | .. | 24.12.68 | செவ்வாய் | பி. ப. 3.30 |
| | 9.1.69 | வியாழன் | .. | 3. 1.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 16.1.69 | வியாழன் | .. | 9. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 24.1.69 | வெள்ளி | .. | 16. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 31.1.69 | வெள்ளி | .. | 24. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| **பெப்புருவரி** .. | 7.2.69 | வெள்ளி | .. | 31. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 14.2.69 | வெள்ளி | .. | 7. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.2.69 | வெள்ளி | .. | 14. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 27.2.69 | வியாழன் | .. | 20. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| **மாச்சு** .. | 7.3.69 | வெள்ளி | .. | 27. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 14.3.69 | வெள்ளி | .. | 7. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.3.69 | வெள்ளி | .. | 14. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 28.3.69 | வெள்ளி | .. | 21. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| **ஏப்பிறல்** . | 3.4.69 | வியாழன் | .. | 27. 3.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 11.4.69 | வெள்ளி | .. | 31. 3.69 | திங்கள் | பி. ப. 3.30 |
| | 18.4.69 | வெள்ளி | .. | 8. 4.69 | செவ்வாய் | ந. ப. 12.00 |
| | 25.4.69 | வெள்ளி | .. | 18. 4.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.69 | புதன் | .. | 23. 4.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| **மே** .. | 9.5.69 | வெள்ளி | .. | 30. 4.69 | புதன் | பி. ப. 3.30 |
| | 15.5.69 | வியாழன் | .. | 9. 5.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.69 | வியாழன் | .. | 15. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 30.5.69 | வெள்ளி | .. | 22. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| **யூன்** .. | 6.6.69 | வெள்ளி | .. | 30. 5.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 13.6.69 | வெள்ளி | .. | 6. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 20.6.69 | வெள்ளி | .. | 13. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 27.6.69 | வெள்ளி | .. | 20. 6.69 | வெள்ளி | பி. ப. 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1968 ம் ௵ டிசம்பர் மீ 20 ந் உ.

**எல். டபிள்யூ. பீ. ப்ரிஸ்,**
**பதில் அரசாங்க அழுத்தகன்.**

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது